தமிழர் நினைவேந்தல் அகவம் - சுவிஸ்
Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil
www.maveerarnaal.ch trfswiss@gmail.com

# தமிழீழத் தேசிய மாவீரர் நினைவாக நடாத்தப்பெறும் பேச்சுப்போட்டி 2019

**17 வயதுப்பிரிவு**
(01.01.2002 – 31.12.2003 வரையில் பிறந்தோர்)

## முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் பத்தாண்டுகளும் தமிழின அழிப்பின் தொடர்ச்சியும்

ஈழத்தமிழர்களின் நெஞ்சங்களிலே என்றும் ஆறாத வடுவாக நிலைத்திருக்கின்றது முள்ளிவாய்க்கால் பேரவலம். இந்தப் பேரவலம் நிகழ்த்தப்பட்டு பத்து ஆண்டுகளாகிவிட்டன. ஒரு தேசிய இனம் மாவிலாறு என்கின்ற இடத்தில் தொடங்கி முள்ளிவாய்க்கால் வரை பல மாதங்களாக இடைவெளியற்றுத் துரத்தித்துரத்தி அழிக்கப்பட்டுள்ளது.

இரத்தமும் சதையுமாகப் பிணக்குவியலுக்குள் அமுத்தப்பட்ட விடுதலை முழக்கத்தின் ஓசை அடங்கி பத்தாண்டு காலம் நிறைவுற்றுள்ளது. முள்ளிவாய்க்காலில் கொள்ளி வைத்து எள்ளி நகையாடிய இரக்கமற்ற அரக்கர்களின் இரைச்சல் எங்கள் காதுகளில் இன்னும் இரைந்து கொண்டுதான் இருக்கிறது. உலகத் தமிழர்களின் நெஞ்சமெல்லாம் நீங்காத வடுவாய், அழியாத சுவடாய் ஆழமாய் புரையோடிக் கிடக்கிறது முள்ளிவாய்க்கால் பேரவலம்.

காலத்தின் நீட்சி எங்கள் காயங்களை ஆற்றும் மாற்றும் என்கிறார்கள். ஆனால், எங்கள் காயங்களை ஆற்றவும் மாற்றவும் வந்த காலங்கள் தான் காயப்பட்டுப் போனது. விடிந்ததும் கலைந்து போக எங்கள் கதை கனவு அல்ல. அது விடிவதற்காகக் காத்துக்கிடக்கும் ஓர் இரவு.

ஒரு தேசத்தின் விடுதலை குறித்தும் அதன் போராட்ட உத்திகள் குறித்தும் விடுதலையை சுவாசித்துக் கொண்டு வாழும் தேசத்து மக்களுக்கு முழுதாகப் புரியாது. தலை வலியும் காய்ச்சலும் தனக்கு வந்தால்தான் தெரியும் என்பார்களே! அப்படித்தான் உரிமைகள் மறுக்கப்பட்ட தேசத்தில் விடுதலை கேட்டுப் போராடியவரின் தியாகத்தையும் வலிகளையும் இவ்வுலகம் பூரணமாய் புரிந்து கொள்ள வாய்ப்பில்லை.

நாம் தாங்கிய துயரங்களை எடுத்துச் சொல்ல எம்மிடம் வார்த்தையுமில்லை! வெறும் ஊகங்களின் அடிப்படையிலேயே காய்கள் நகர்த்தப்பெறுகின்றன. அதனால் தான் காயங்களுடனும் கதறலுடனும் ஓடித்திரிகின்ற பாவப்பட்ட பசுக்களை இன்னும் துரத்தித்துரத்திக் கொத்திக் கொண்டே இருக்கின்றன பசியற்ற காக்கைகள்.

பெரும் தியாகங்களையும் பேரவலங்களையும் தன்னகத்தே கொண்டு ஒரு பத்தாண்டு காலத்தைக் கடந்து வந்த நாம், விடுதலைப் போராட்டத்தின் இலக்கை நோக்கி பயணித்து இருக்கின்றோமா என்றால், நிச்சயமாக இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

தோல்வியையும் அவலத்தையும் முன்னிறுத்தும் அரசியல் எம்மை எப்போதும் நீதியை நோக்கி நகர்த்தாது. அத்தோடு அது ஒரு எதிர்ப்பு அரசியல் வடிவமாகவும் உருத்திரளாது. நாம் பத்து வருடங்களாகத் தேங்கியிருப்பதற்கான முதன்மைக் காரணம் இதுதான்.

'ஈழத்தில் சிங்கள அரசபயங்கரவாத இராணுவம் தமிழர்களை இன அழிப்பு செய்து கொண்டிருக்கிறது' என உலக நாடுகள் ஏற்றுக் கொண்டால் தான் 'தனித் தமிழீழம்' குறித்து பொது வாக்கெடுப்பு நடத்த முடியும். அந்த நிலையினைக் கொண்டு வருவதற்கு நாம் மற்ற நாடுகளிடம் கருத்தியல் மாற்றத்தினையும், எம்மவரிடத்தில் அரசியல் புரிந்துணர்வுகளையும் ஏற்படுத்த வேண்டும்.

முள்ளிவாய்க்காலில் நடந்தேறிய இனப்படுகொலைகளுக்காகப் பேரினவாதத்தின் எந்த ஆட்சியரோ, அதிகாரிகளோ இன்றுவரை சிறுவருத்தம் கூடத்தெரிவிக்கவில்லை. முள்ளிவாய்க்காலில் அவலமாக இறந்துபோன சிறுவர்கள், குழந்தைகள் உள்ளிட்ட தமிழர்கள் அனைவரையும் பயங்கரவாதிகள் என்றே பேரினவாதம் முன்னுரைத்து நிற்கின்றது.

உலக நாடுகளில் ஒன்று கூட ஈழத்தில் நடந்து கொண்டிருப்பது ~இன அழிப்புத் தான்' என்பதனை இன்று வரை ஏற்றுக் கொள்ளவில்லை. சில நாடுகள் மட்டுமே அங்கு நடந்தது 'போர்க்குற்றம்' என்ற நிலைபாட்டுக்குத் தற்போது வந்துள்ளன. ஏனைய நாடுகளுக்குப் புரியும்படி சரியான தகவல்கள் கடத்தப்படவில்லை. அவர்களும் செவிசாய்க்கவில்லை. நாங்களும் வாய்ப்புகளைச் சரியாகப் பயன்படுத்தவில்லை. வெற்றிடங்கள் அனைத்தையும் காற்றுத் தான் நிரப்பியது.

முள்ளிவாய்க்காலில் கொத்துக்கொத்தாக எங்கள் உறவுகளின் உயிர்களைப் பறித்த பின்னும் சிங்களப் பேரினவாதத்தின் பசி அடங்கவில்லை. எங்கள் நிலத்தையும் எங்கள் இனத்தையும் கொஞ்சங்கொஞ்சமாக அது விழுங்கி வருகிறது. எமது தாயகத்தில் அண்மையில் நடைபெற்ற குண்டுவெடிப்புகளும் தமிழின அழிப்பின் இன்னோர் வடிவமே என்பதை நாம் நன்கு புரிந்துகொள்ள வேண்டும்.

எமது இனத்தை அழிப்பதற்காக எம்மின அடையாளங்கள் சந்தடியின்றி அழிக்கப்படுகின்றன. தமிழர் தாயகப் பகுதிகளில் பௌத்த சிலைகள் நிறுவப்படுகின்றன. கைதுகளும், சிறைவிதிப்புகளும் தொடர்ந்த வண்ணமே உள்ளன. எமது இளைய தலைமுறையினரின் கல்வியையும், நல்லொழுக்கத்தையும், எழுச்சியையும் நிர்மூலமாக்குவதற்காகப் போதைப்பொருட்கள் எம் தாயகத்தில் தாராளமாகப் புழக்கத்தில் விடப்பட்டுள்ளன.

சிங்கள அரச பயங்கரவாதத்தால் அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் எம்மினத்தைப் பாதுகாத்து, எமது சுதந்திர தேசத்தின் விடுதலைக்காக உலகளவில் பரந்துபட்ட அரசியல் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டிய பெரும் பொறுப்பு எம்முடையதாகிறது. இதையுணர்ந்து நாம் எம்மத்தியிலுள்ள வேற்றுமைகள், வெறுப்புகளைக் களைந்து, எமக்கான நீதிக்காகவும், எம்மினத்தின் விடிவுக்காகவும் ஒன்றிணைந்து பன்னாடுகளின் அரசியல் களத்தில் நின்று போராட வேண்டிய காலமிது.

இலக்கு நோக்கிய பயணத்தில் நாம் எமது முழு ஆற்றலையும் திரட்டி வலிமை பெற வேண்டிய காலமிது. தமிழின அழிப்புக் குற்றவாளிகளையும், அவர்களுக்கு உடந்தையாக இருந்த, இருக்கின்ற சதியாளர்களையும் அனைத்துலக போர்க்குற்றவியல் நீதிமன்றில் நிறுத்தி நீதி கேட்கும் காலம் வெகு தொலைவில் இல்லை.

நாம் தமிழீழ விடுதலையை எப்படி, எப்பொழுது அடைவோம் என்பது எமக்கு முன் இருக்கும் கேள்வி. தேவைதான் எதுவொன்றையும் தீர்மானிக்கும் சக்தி. தமிழீழ விடுதலைக்கான தேவைகள் இன்றும் எங்கள் நிலத்தில் அப்படியேதான் இருக்கின்றன. சிங்களத்தின் இனவெறியும் மதவெறியும் தமிழர்களின் விடுதலை நெருப்பை அணையவிடாமல் பார்த்துக் கொள்ளும் என்பதே கடந்த பத்தாண்டுகள் சுட்டிநிற்கும் செய்தி.

அன்பான உறவுகளே! முள்ளிவாய்க்காலில் சாவடைந்த பல்லாயிரக்கணக்கான பொதுமக்களின் உயிர்கள் நமக்குத் துணை நிற்க, மாவீரர் தியாகங்கள் எம்மை வழி நடத்த, எமது தாயகத்தை மீட்போம். எம் இனத்தை அழிவிலிருந்து காப்போம்.

நன்றி,
வணக்கம்